சகரியா

Sword of the Spirit

❖ ஆசிரியர் குறிப்பு

சகரியா - பொருள் - தேவன் நினைவுகூருகிறார் **தகப்பன் - பெரகியா**

❖ இத்தோவின் பேரன், சகரியா யூத மக்கள் பாபிலோனில் தங்கள் 70 ஆண்டுகால அடிமைத்தனத்திலிருந்து திரும்பி வந்த பின் தீர்க்கதரிசனம் உரைத்தார். (சகரியா 1: 1; நெகேமியா 12: 1, 4, 16).

❖ இஸ்ரவேலர்களின் முதல் குழுவை அனுமதித்து, கிமு 538 இல் பெர்சிய ராஜாவான கோரேசின் ஆணையின் கீழ் சகரியாவின் தாத்தா பாபிலோனில் இருந்து திரும்பினார். அவரது குடும்ப பாரம்பரியத்தின்படி, சகரியா ஒரு தீர்க்கதரிசியாய் மாத்திரமல்லாமல் ஒரு ஆசாரியனாகவும் இருந்தார். ஆகையால், யூதர்களின் வழிபாட்டு முறைகளைப் பற்றி அவருக்கு தெரிந்திருக்க வாய்ப்புண்டு.

❖ அவர் ஒருபோதும் தேவாலயத்தில் பணியாற்றவில்லை என்றாலும், தனது முதல் தீர்க்கதரிசனங்களின் போது ஒரு "இளைஞனாக" (சகரியா 2: 4) அவரது வாழ்க்கை தொடங்கி அகாஸ்வேரு ராஜாவின் (கிமு 485-465) காலம் வரை நீட்டிக்கப்பட்டது.

Sword of the Spirit

❖ புத்தகக்குறிப்பு

❖ சகரியா புத்தகதம் சிறு தீர்க்கதரிசன புத்தகங்களின் மத்தியில் தெளிவான மற்றும் அதிக எண்ணிக்கையிலான மேசியாவைப் பற்றின பத்திகளைக் கொண்டுள்ளது. அந்த வகையில், சகரியா புத்தகத்தை சிறிய ஏசாயா புத்தகம் என்றும் எடுத்துக்கொள்ளலாம்.

❖ கிறிஸ்துவின் முதல் வருகையும் (சகரியா 9: 9), அவருடைய 2 ஆம் வருகையும் (9:10 - 10:12) சித்தரிக்ப்பட்டுள்ளது. சகரியா புத்தகத்தின்படி, இரட்சகராகவும், நீதிபதியாகவும், இறுதியில் எருசலேமிலிருந்து தனது மக்களை ஆளுகிற நீதியுள்ள ராஜாவாகவும் இயேசு வருவார் (14: 8–9).

❖ **<u>புத்தகத்தின் நோக்கம் :</u>**

➢ தேவாலயத்தை மீண்டும் கட்டியெழுப்ப மக்களை ஊக்குவிக்க…
➢ தேவனை நோக்கிப் பார்க்கும்போது சோர்வுகள் நீங்கி தேவ மகிமையினால் பெலனடையச்செய்ய…
➢ புறஜாதியினரும் தேவதிட்டத்திற்குள் உண்டு என்பதை அறிவிக்க…
➢ இஸ்ரேலுக்கான ஆயிரவருட அரசாட்சியின் ஆசீர்வாதங்களை முன்னறிவித்து, அதற்கு வழிவகுக்கும் நிகழ்வுகளை எடுத்துக் காட்ட…..

Sword of the Spirit

❖ வரலாற்றுப் பின்னணி

- சகரியாவின் வரலாற்று பின்னணியும் , அமைப்பும் அவரது சமகாலத்தவரான தீர்க்கதரிசி ஆகாயைப் போன்றது. (538 கி.மு.),
- பெர்சியா ராஜா கோரேஸ் பாபிலோனியரால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களை தங்கள் தாயகத்தை மீளக்குடியமர்த்துவதற்காக விடுவித்தார் (எஸ்றா 1: 1-4).சுமார் 45,000 முதல் 50,000 பேர் பாபிலோனில் இருந்து திரும்பினர். அவர்கள் உடனடியாக ஆலயத்தை மீண்டும் கட்டத் தொடங்கினர். (எஸ்றா 3: 1–4: 5),
- சகரியாவின் காலத்தில் >> *செருபாபேல் - யூதாவின் அதிபதி, யோசுவா - பிரதான ஆசாரியன் . இந்த இரண்டு பேரும் சிறைப்பட்ட யூதர்களின் முதல் கூட்டத்தை வழிநடத்தி , ஆலயத்தை மீண்டும் கட்டத் தொடங்கினர்.*
- அண்டை நாடுகளின் எதிர்ப்பும், அதன்பிறகு அலட்சியமும் ஏற்பட்டதால், வேலை கைவிடப்பட்டது (எஸ்றா 4:24). 16 ஆண்டுகளுக்குப் பின் (எஸ்றா 5: 1-2), ஆலயத்தைக் கட்டியெழுப்ப மக்களை தூண்டுவதற்கேதுவாக சகரியாவும் , ஆகாயும் கர்த்தருடைய வார்த்தைகளை எடுத்துரைக்க தேவனால் நியமிக்கப்பட்டனர்.
- இதன் விளைவாக, தேவாலயம் பின்னும் 4 ஆண்டுகளுக்குப் பின்னர் கட்டி முடிக்கப்பட்டது .(516 கி.மு; எஸ்றா 6:15)

Sword of the Spirit

தேவாலயம் கட்டப்படும்போது ஆட்சியில் இருந்த ராஜாக்கள்



Sword of the Spirit

பாபிலோனின் சிறையிறுப்பிலிருந்து 3 கட்டமாக எருசலேமுக்கு திரும்பியவர்கள்



Sword of the Spirit

சகரியா புத்தகத்தின் சுருக்கம்

8 தரிசனங்கள்

1. குதிரைகள்
2. 4 கொம்புகள் & 4 தொழிலாளிகள்
3. அளவு நூல் பிடித்திருந்த புருஷன்
4. பிரதான ஆசாரியன் யோசுவா
5. குத்துவிளக்கு, ஒலிவ மரங்கள்
6. பறக்கிற புஸ்தகச்சுருள்
7. மரக்கால், ஸ்திரீ
8. 4 இரதங்கள்

அதிகாரங்கள் 1 - 6

கேள்வி, பதில்கள்

கேள்வி ::
உபவாசம் ??????

பதில் ::

1. கண்டனம்
2. கோபம்
3. மீண்டும் புதுப்பித்தல்
4. மாற்றம்

அதிகாரங்கள் 7,8

2 பாரங்கள்

1. பிற ஜாதிகள்
2. இஸ்ரவேல்

அதிகாரங்கள் 9 - 14

Sword of the Spirit

8
தரிசனங்கள்

Sword of the Spirit

தரிசனம் 1 :: (குதிரைகள்)
(1 : 8 - 17)

<u>பொருள்::</u> தேசங்களுக்கு எதிரான கர்த்தரின் கோபமும், மீட்கப்பட்ட இஸ்ரவேலின் மீது ஆசீர்வாதமும்.

- சிவப்புக்குதிரையில் ஏறியிருந்த ஒரு புருஷன் . அவருக்குப் பின்னாலே சிவப்பும், மங்கின நிறமும்,வெண்மையுமான குதிரைகள்.(8)
  சிவப்புக் குதிரை >> யுத்தம்
- நான் கொஞ்சங் கோபங்கொண்டிருந்தபோது அவர்கள் (புறஜாதிகள்) தங்கள் கேட்டை அதிகரிக்கத் தேடினபடியினால்,சுகமாய் வாழுகிற புறஜாதிகள் பேரில் நான் கடுங்கோபங்கொண்டேன்..(15)
- பூமி முழுதும் அமைதலும் , அமரிக்கையுமாய் இருக்கிறது . (11) *சகரியாவின் நாட்களில் தேசம் அமைதியாய் இருந்தது.ஆலயத்தைக் கட்டி எழுப்பவேண்டிய நேரம் அது.*

- நான் எருசலேமுக்காகவும், சீயோனுக்காகவும் மகா வைராக்கியம் கொண்டிருக்கிறேன்.(14)
- என் ஆலயம் கட்டப்படும் …(16)
- இன்னும் எருசலேமைத் தெரிந்துகொள்ளுவார்(17) >> *(1000 வருட அரசாட்சி)*

Sword of the Spirit

தரிசனம் 2 :: (4 கொம்புகள்,4 தொழிலாளிகள்)
(1 : 18 - 21)

***<u>பொருள் ::</u>* இஸ்ரவேலை சிதறடித்த தேசங்கள் மீதான தேவனின் நியாயத்தீர்ப்பு.**

- 4 கொம்புகள் - யூதாவைவும்,இஸ்ரவேலையும்,எருசலேமையும் சிதறடித்த புறஜாதியாரின் ஆட்சிகள் *>> பாபிலோன்,மேதிய - பெர்சியா , கிரேக்கு, ரோம ஆட்சி.*
- 4 தொழிலாளிகள் - யூதாவின் தேசத்தைப் பாழாக்கின ஜாதிகளை விழத்தள்ள வந்தவர்கள் .

நியாயந்தீர்க்க வந்தவர்கள் >> 4 வாதைகள் >> பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளை நோய் (எசே 14:21)

Sword of the Spirit

தரிசனம் 3 :: (அளவு நூல் பிடித்திருந்த புருஷன்)
(2 : 1 - 13)

<u>பொருள் ::</u> மீட்டெடுக்கப்பட்ட இஸ்ரேலுக்கு கடைசி நாட்களில் கர்த்தர் அளிக்கும் ஆசீர்வாதம்.

- எருசலேமின் அகலம் இவ்வளவு என்றும் அதின் நீளம் இவ்வளவு என்றும் அறியும்படி அதை அளக்கிறதற்குப் போகிறேன் .(2)
  >> சகரியாவின் நாட்களில் எருசலேம் கட்டப்படப் போகிறது.

- சீயோன் குமாரத்தியே, கெம்பீரித்துப்பாடு; இதோ நான் வந்து உன் நடுவில் வாசம்பண்ணுவேன். (10)
  >> 1000 வருட அரசாட்சி

- எருசலேம் தன் நடுவிலே கூடும் மனுஷரின் திரளினாலும் மிருகஜீவன்களின் திரளினாலும் மதிலில்லாத பட்டணங்கள்போல் வாசஸ்தலமாகும். நான் அதற்குச் சுற்றிலும் அக்கினி மதிலாயிருந்து, அதின் நடுவில் மகிமையாக இருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.(4,5) *>> 1000 வருட அரசாட்சி*

Sword of the Spirit

தரிசனம் 4 :: பிரதான ஆசாரியன் யோசுவா
(3 : 1 - 10)

பொருள் :: இஸ்ரேல் பாவத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்டு , ஒரு ஆசாரிய தேசமாக மீண்டும் நிலைநிறுத்தப்படுதல்.

- பிரதான ஆசாரியனாகிய யோசுவாவை
(*இஸ்ரவேலின் பிரதிநிதி*) எனக்குக் காண்பித்தார்;
அவன் கர்த்தருடைய தூதனுக்கு முன்பாக நின்றான்;
சாத்தான் அவனுக்கு விரோதஞ்செய்ய அவன் வலது
பக்கத்திலே நின்றான். (1) >> *சாத்தான் இஸ்ரவேலை அழிக்க வாஞ்சை*
- நான் உன் அக்கிரமத்தை உன்னிலிருந்து நீங்கச்செய்து,
உனக்குச் சிறந்த வஸ்திரங்களைத் தரிப்பித்தேன் . (4)
- இதோ, கிளை என்னப்பட்டவராகிய என் தாசனை நான்
வரப்பண்ணுவேன். (8) >> *இயேசு கிறிஸ்து*
- நீ என் வழிகளில் நடந்து என் காவலைக் காத்தால்,
நீ என் ஆலயத்தில் நியாயம் விசாரிப்பாய். (7)
>> *இஸ்ரவேல் இயேசு கிறிஸ்துவைத் தரித்திக் கொள்ள வேண்டும்*

Sword of the Spirit

தரிசனம் 5 :: குத்து விளக்கு , ஒலிவமரங்கள் (4 : 1 - 14)

<u>பொருள் ::</u> மேசியாவினுடைய ராஜ்யத்தின் கீழ் தேசங்களுக்கு மேலாக இஸ்ரேல் உயர்த்தப்பட்டு , கிறிஸ்துவே வெளிச்சமாக இருப்பார்.

- **குத்துவிளக்கு** >> *தேவாலயம் / சபை*
- **7 அகல்கள்** >> *பூமியெங்கும் சுற்றிப் பார்க்கிறவைகளாகிய கர்த்தருடைய 7 கண்கள். (10)*
- **2 ஒலிவ மரங்கள்** >> *அபிஷேகம் பெற்றவர்கள் (14) >> செருபாபேல், யோசுவா / 2 சாட்சிகள் (வெளி 11:3,4)*
- **பொன்னிறமான எண்ணெய்** >> *அபிஷேகம் >>ஆவியானவரின் அபிஷேகம்..*

- செருபாபேல் தேவாலயத்துக்கு அஸ்திபாரம் போட தலைக்கல்லை கொண்டு வந்தான் / இயேசு கிறிஸ்து தலைக்கல் - சபைக்கு அஸ்திபாரம்.

★ **பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும்.**

Sword of the Spirit

தரிசனம் 6 :: பறக்கிற புஸ்தகச்சுருள்
(5 : 1 - 4)

பொருள் :: இஸ்ரவேலின் பாவத்தினிமித்தம் தீவிரமும் , முழுமையுமாக வருகிற தேவனின் நியாயத்தீர்ப்பு.

- **புஸ்தகச்சுருள்** >> சாபம் >> நியாயத்தீர்ப்பு (3)
  >> பாவிகளை நியாயந்தீர்க்கிற கர்த்தருடைய வார்த்தை.
- **பறக்கிற** >> பூமியின்மீதெங்கும் புறப்பட்டுப் போகிற கர்த்தருடைய நீதி சரிகட்டுதல். (3)
- *தம்முடைய வார்த்தையை நிராகரிக்கும் பாவிகளை கர்த்தர் வேரறுத்து அழித்துவிடுவார் என்று சகரியாவின் காலத்திற்கான செய்தியும், மேசியாவின் ராஜ்யத்திற்கு முன்னர் இஸ்ரேலுக்கும் , உலகத்துக்கும் இது எதிர்கால செய்தியையும் கொண்டுள்ளது.*

Sword of the Spirit

தரிசனம் 7 :: மரக்கால் , ஸ்திரீ
(5 : 5 - 11)

பொருள் :: கர்த்தருக்கு விரோதமான காரியங்கள்,பாவங்கள் தேசத்திலிருந்து நீக்கப்படுதல்



- **புறப்பட்டுவருகிறதாகிய ஒரு மரக்கால்**
  >> நியாயத்தீர்ப்புக்கென்று ஆயத்தமாகி வருகிற பூமி.
- **ஸ்திரீ** *>> அக்கிரமக்காரி (7)*
-
- **ஈயமூடி** *>> தேவகோபமானது அக்கிரமம் மறுபடியும் தேசத்தைப் பாழாக்காதபடி அதை அடைத்துப்போடுதல்.*
- **சிநெயார்** *>> பாபிலோன் >> பாவ உலகின் சின்னம்.*
- *பாபிலோனின் இறுதித் நியாயத்தீர்ப்பிற்கான களத்தை அமைக்க அக்கிரமங்கள் அங்கு கொண்டு போகப்படுகிறது. (வெளி. 17-18).*
- *இது தேவஜனம் பாபிலோன் என்னும் அடிமைத்தனத்திலிருந்து வெளியேற ஒரு எச்சரிக்கை. கிறிஸ்துவை விசுவாசிக்கிற நாம் பாவ உலகில் வாழ்ந்தாலும், உலகத்திற்குறியவர்களல்ல, நாம் தேவனுக்கு முன்பாக பரிசுத்தமானவர்களாக இருக்க வேண்டும்.*

Sword of the Spirit

தரிசனம் 8 :: 4 இரதங்கள்
(6 : 1 - 8)
<u>பொருள் ::</u> புறஜாதிகள் மேல் கர்த்தருடைய நியாயத்தீர்ப்பு

- இரண்டு வெண்கல பர்வதங்கள் *>> சீயோன் மற்றும் ஒலிவமலை >> இஸ்ரவேலுக்கு விரோதமாய் வருகிற தேசங்களுக்கு கர்த்தர் அளிக்கும் நியாயத்தீர்ப்பு*
- சிவப்புக் குதிரைகள் *>> யுத்தம் ,இரத்தம்சிந்துதல்*
- கறுப்புக் குதிரைகள் *>>துக்கம் / பஞ்சம்*
  >> வடதேசம் >> பாபிலோன்
- வெள்ளைக் குதிரைகள் *>> மகிழ்ச்சி / வெற்றி>> பாபிலோன்*
- புள்ளிபுள்ளியான சிவப்புக் குதிரைகள்
  >> துக்கமும்,மகிழ்ச்சியும் கலந்து >>தென் தேசம் >> எகிப்து

★ (6: 9 - 15) >> 1000 வருட அரசாட்சி

★ பிரதான ஆசாரியன் யோசுவா *>> கிறிஸ்துவின் மாதிரி*

Sword of the Spirit

கேள்வி பதில்கள்

Sword of the Spirit

❖ வரலாற்றுப் பிண்ணனி

70 வருட காலமாக பாபிலோனின் கீழ் அடிமைப் பட்டிருந்த இஸ்ரவேல் ஜனங்கள் , அங்கு தங்கள் தேசம் அழிந்ததை நினைவுகூர்ந்து உபவாசம் இருந்து துக்கங்கொண்டாடினர்.

ஒரு சிறுகூட்டமாய் திரும்பி தங்கள் தேசத்துக்கு வந்த ஜனங்கள், இப்பொழுது தேசத்துக்கு வந்தாயிற்றே , இன்னும் அழுது தங்களைத் தாங்களே ஒடுக்கிக் கொள்ள வேண்டுமோ? என்று கர்த்தருடைய வார்த்தையை அறிந்து கொள்ள சரேத்சேரும் , ரெகெம்மெலேக்கும் ,அவனுடைய மனுஷரும் தேவனுடைய ஆலயத்துக்கு அனுப்பப்பட்டார்கள்.

- **10 ஆம் மாதத்தின் உபவாசம்** *>> சிதேக்கியா அரசாண்ட 9 ஆம் வருஷம் ,10 ஆம் மாதம் எருசலேம் பாபிலோன் ராஜாவாகிய நேபுகாத் நேச்சாரால் முற்றிக்கை போடப்பட்டது. (எரே 39 :1, 2 இரா 25 : 1)*
- **4 ஆம் மாதத்தின் உபவாசம்** *>> சிதேக்கியா அரசாண்ட 11 ஆம் வருஷம் , 4 ஆம் மாதம் , எருசலேம் நகரத்து மதிலில் திறப்புக் கண்டது. (எரே 39 : 2 , 2 இரா 25 : 3)*
- **5 ஆம் மாதத்தின் உபவாசம்** *>> எருசலேம் ஊரார் சிறைப்பட்டுப் போனார்கள் .(எரே 1 : 3)*
- **7 ஆம் மாதத்தின் உபவாசம்** *>> எருசலேமில் மீதமிருந்த ஜனங்கள் மேல் அதிகாரியாக வைக்கப்பட்டிருந்த கெதலியா கொல்லப்பட்டான் >> மீதியானவர்கள் வழி நடத்தப்பட ஒருவன் இல்லாதபடியினால் தடுமாற்றம். (எரே 41 : 1 - 18).*

Sword of the Spirit

கேள்வி :: அழுது ஒடுக்கத்திலிருக்க வேண்டுமோ?????

பதில் 1 :: (7 : 4 - 7)

- **கண்டனம்**
    - நீங்கள் உபவாசம்பண்ணி துக்கங்கொண்டாடினபோது நீங்கள் எனக்கென்றுதானா உபவாசம்பண்ணினீர்கள்? (5)

பதில் 2 :: (7 : 8 - 14)

- **கோபம்**
    - நீங்கள் உண்மையாய் நியாயந்தீர்த்து, அவனவன் தன்தன் சகோதரனுக்குத் தயவும் இரக்கமும் செய்து,..... உங்களில் ஒருவனும் தன் சகோதரனுக்கு விரோதமாய்த் தன் இருதயத்தில் தீங்கு நினையாமலும் இருங்கள் என்றார்.(9,10)
    - அவர்களுக்கோ கவனிக்க மனதில்லை (11)
    - ஆதலால் நான் கூப்பிட்டபோது, அவர்கள் எப்படி கேளாமற்போனார்களோ, அப்படியே அவர்கள் கூப்பிட்டபோது நானும் கேளாமல் இருந்தேன்.(13)

Sword of the Spirit

பதில் 3 :: (8 : 1 - 17)

- **மீண்டும் புதுப்பித்தல்**
  - நான் சீயோனிடத்தில் திரும்பி, எருசலேமின் நடுவிலே வாசம்பண்ணுவேன்; எருசலேம் சத்திய நகரம் என்றும், சேனைகளுடைய கர்த்தரின் பர்வதம் பரிசுத்த பர்வதம் என்றும் அழைக்கப்படும் . (3)
  - தீர்க்கதரிசிகளின் வாயினால் இந்த வார்த்தைகளை இந்நாட்களில் கேட்டுவருகிறவர்களே, உங்கள் கைகள் திடப்படக்கடவது . (9)
  - யூதா வம்சத்தாரே, இஸ்ரவேல் வம்சத்தாரே, நீங்கள் புறஜாதிகளுக்குள்ளே சாபமாயிருந்ததுபோலவே, ஆசீர்வாதமாயிருக்கும்படி நான் உங்களை இரட்சிப்பேன்; பயப்படாதேயுங்கள், உங்கள் கைகள் திடப்படக்கடவது. (13)
  - இந்த ஜனத்தில் மீதியானவர்களின் பார்வைக்கு இந்நாட்களில் ஆச்சரியமாயிருந்தாலும், என் பார்வைக்கும் ஆச்சரியமாயிருக்குமோ என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.(6)

Sword of the Spirit

செய்ய வேண்டிய காரியங்கள் (16)	கர்த்தர் வெறுக்கிற காரியங்கள் (17)
• உண்மையை பேசுங்கள், • சத்தியத்துக்கும், சமாதானத்துக்கும் ஏற்க நியாயந்தீருங்கள்	• பிறனுக்கு விரோதமாக இருதயத்தில் தீங்கு நினையாமலும், பொய்யாணையின் மேல் பிரியப்படாமலும் இருங்கள்.

Sword of the Spirit

பதில் 4 :: (8 : 18 - 23)

- **மாற்றம்**
  - உபவாசம் ===> சந்தோஷம் , மகிழ்ச்சி , நல்ல பண்டிகை (19)
  - 1000 வருட அரசாட்சி ::
    - **மேசியாவின் ராஜ்யம்** : *இஸ்ரேல், பூமியின் சகல ராஜ்யங்களின் மத்தியில், உலகின் ஈர்ப்பாக இருக்கும். யூதர்கள் தங்கள் ராஜ்யத்தில் மிகவும் ஆசீர்வதிக்கப்பட்டதைப் பார்த்து, ஜனங்களும், ஜாதிகளும் மீட்பர் இயேசு ராஜாவைச் சந்திக்கச் வருவார்கள்.*
    - இன்னும் ஜனங்கள், அநேகம் பட்டணங்களின் குடிகள் வருவார்கள்.(20)
      >> இஸ்ரவேல் + புறஜாதிகள்.
    - அநேக ஜனங்களும் பலத்த ஜாதிகளும் எருசலேமிலே சேனைகளின் கர்த்தரைத் தேடவும், கர்த்தருடைய சமுகத்தில் விண்ணப்பம்பண்ணவும் வருவார்கள்.(22)

★ **ஆகையால் சத்தியத்தையும் , சமாதானத்தையும் சிநேகியுங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (10)**

Sword of the Spirit

2 பாரங்கள்

Sword of the Spirit

கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம் 1

மேசியா வரும் காலம் வரை பிறஜாதிகளை கர்த்தர் கையாளுதல்

- **ஆதிராக் , தமஸ்கு (9 : 1 - 8)**
- **இஸ்ரவேலின் சமாதானப் பிரபு (9 : 9,10)**
- **இஸ்ரவேலைக் குறித்தான தேவனின் திட்டம் {9 :11 - 17)**
- **ஆசீர்வாதங்கள் (10 : 1 - 12)**
- **நல்ல மேய்ப்பனை உதாசீனப்படுத்தி , தந்திரமானவர்களின் ஆட்சி (11 : 1 - 17)**

கர்த்தருடைய வார்த்தையாகிய பாரம் 2

"கடைசி நாளில்" இஸ்ரேலுக்காக காத்திருக்கும் மகிமையான ஆசீர்வாதங்கள்

- **இஸ்ரவேலின் விடுதலை (12 : 1 - 14)**
- **பாவத்திலிருந்து கழுவப்படுதல் (13 : 1 - 6)**
- **மேய்ப்பன் வெட்டப்பட்டு, ஆடுகள் சித்றடிக்கப்படுதல் (13 : 7 - 9)**
- **கர்த்தருடைய நாள் , கர்த்தர் பூமியின் மீதெங்கும் ராஜா (14 : 1 - 21)**

Sword of the Spirit

பாரம் 1 :: (9 - 11)
அதிகாரம் . 9

- தீரு அக்கினிக்கு இரையாகும்,அஸ்கலோன் பயப்படும், காத்சா மிகவும் துக்கிக்கும், பெலிஸ்தரின் கர்வத்தை அழிப்பேன்.(3-6)

- சேனையானது புறப்படும்போதும், திரும்பி வரும்போதும், என் ஆலயம் காக்கப்படும்படி அதைச் சுற்றிலும் பாளயம்போடுவேன்; இனி ஒடுக்குகிறவன் அவர்களிடத்தில் கடந்துவருவதில்லை; அதை என் கண்களினாலே பார்த்துக்கொண்டிருக்கிறேன். (8) >> *பேரரசர் அலெக்சந்தரின் காலத்தில் யூதர்கள் விடுதலையோடு தேவனை ஆராதித்தனர்.*

- இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார்; அவர் நீதியுள்ளவரும் இரட்சிக்கிறவரும் தாழ்மையுள்ளவரும், கழுதையின்மேலும் கழுதைக்குட்டியாகிய மறியின்மேலும் ஏறிவருகிறவருமாயிருக்கிறார்.(9) >> *இயேசு கிறிஸ்து*

- நான் எனக்கென்று யூதாவை நாணேற்றி, எப்பிராயீமிலே வில்லை நிரப்பி, சீயோனே, உன் புத்திரரைக் கிரேக்குதேசப் புத்திரருக்கு விரோதமாக எழுப்பி, உன்னைப் பராக்கிரமசாலியின் பட்டயத்துக்கு ஒப்பாக்குவேன்.(13) >> *சுவிசேஷத்தின் காலம்.*

Sword of the Spirit

அதிகாரம் . 10

- பின்மாரிகாலத்து மழையைக் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொள்ளுங்கள்; அப்பொழுது கர்த்தர் மின்னல்களை உண்டாக்கி, வயல்வெளியில் அவரவருக்குப் பயிருண்டாக அவர்களுக்கு மழையைக் கட்டளையிடுவார்.(1) >> *ஏசா 44:3 , தாகமுள்ளவன் மேல் தண்ணீரையும் ……*
- அவர்களிலிருந்து கோடிக்கல்லும், அவர்களிலிருந்து கூடாரமுளையும், அவர்களிலிருந்து யுத்தவில்லும் வரும் >> *இயேசு கிறிஸ்து*
- >> *ஆயிரம் வருட அரசாட்சி*
  - நான் அவர்களைப் பார்த்துப் பயில்போட்டு அவர்களைக் கூட்டிக்கொள்ளுவேன்; அவர்களை மீட்டுக்கொண்டேன்; அவர்கள் பெருகியிருந்ததுபோலவே பெருகிப்போவார்கள் (8).
  - நான் அவர்களை எகிப்துதேசத்திலிருந்து திரும்பிவரப்பண்ணி, அவர்களை அசீரியாவிலிருந்து கூட்டிக்கொண்டு அவர்களைக் கீலேயாத் தேசத்துக்கும் லீபனோனுக்கும் வரப்பண்ணுவேன்; அவர்களுக்கு இடம் போதாமற்போகும்.(10)
  - நான் அவர்களைக் கர்த்தருக்குள் பலப்படுத்துவேன்; அவர்கள் அவருடைய நாமத்திலே நடந்துகொள்ளுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.(12)

Sword of the Spirit

அதிகாரம். 11

- மேசியா நிராகரிக்கப்படுதல், விளைவுகள் *>> ரோமர்களின் ஆட்சிகாலம்.*
- லீபனோனே *{>> ரோமர்கள் எருசலேமுக்குள் நுழைவதர்கேதுவான வழி}*, அக்கினி உன் கேதுருமரங்களைப் *{>> ஆலயம்}* பட்சிக்கும்படி உன் வாசல்களைத் திற.(1)
- கொலையுண்கிற ஆடுகளை *{>>யூதர்கள்}* மேய்க்கக்கடவாய்.(4)
- அவைகளை உடையவர்கள், அவைகளைக் கொன்றுபோட்டுத் தங்களுக்குக் குற்றமில்லையென்று எண்ணுகிறார்கள். அவைகளை விற்கிறவர்கள், கர்த்தருக்கு ஸ்தோத்திரம், நாங்கள் ஐசுவரியமுள்ளவர்களானோம் என்கிறார்கள்; அவைகளை மேய்க்கிறவர்கள், அவைகள்மேல் இரக்கம் வைக்கிறதில்லை. (5) *{>> யூத ஆட்சியாளர்கள்}*
- கொலையுண்கிற மந்தையாகிய சிறுமைப்பட்ட உங்களை நான் மேய்ப்பேன்; *{>> நல்ல மேய்ப்பன் >> இயேசு கிறிஸ்து}* நான் இரண்டு கோல்களை எடுத்து, ஒன்றிற்கு அநுக்கிரகம் என்றும், ஒன்றிற்கு நிக்கிரகம் என்றும் பேரிட்டு மந்தையை மேய்த்து,(7)

Sword of the Spirit

❖ இரண்டு கோல்கள் >> உடன்படிக்கை

அநுக்கிரகம் (கிருபை)	நிக்கிரகம் (ஒற்றுமை என்னும் கட்டு)
• தேவாலயத்தின் மகிமை • தேசத்தின் பசுமை ,செழிப்பு	• யூதாவுக்கும் (தெற்கு இஸ்ரவேல்), இஸ்ரவேலுக்கும் (வடக்கு இஸ்ரவேல்) இடையிலான சகோதரத்துவம் (14)

- ஜனங்களை மேய்க்க வந்த மேசியாவை அவர்கள் நிராகரித்ததால் ,அந்த இரண்டு கோல்களை அவர் முறித்தார்.(8 - 14)
- மேசியாவை சிலுவையில் ஒப்புகொடுத்தார்கள்.(12 - 14)
- கோல்கள் முறிக்கப்பட்டது *>> கி.பி 70 ரோமர்களால் தேவாலயம் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிஅழிக்கப்பட்டது. யூதர்கள் பூமியெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள்.*
- மதியற்ற மேய்ப்பன் *>> இயேசு கிறிஸ்து நிராகரிக்கப்பட்டு ,அவருடைய இடத்தில் வேறொரு மேய்ப்பன் >> அந்திக்கிறிஸ்து*
- மந்தையைக் கைவிடுகிற அபத்தமான மேய்ப்பனுக்கு ஐயோ!

Sword of the Spirit

பாரம் 2 :: (12 - 14)
அதிகாரம் . 12

கடைசி நாட்களில்

- எருசலேம், எல்லா ஜனங்களுக்கும் தத்தளிப்பின் பாத்திரமாகவும் , பாரமான கல்லாகவும் இருக்கும்.அதை கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்.(2,3)
- எருசலேமின் குடிகள், சேனைகளின் கர்த்தராகிய தங்கள் தேவனுடைய துணையினால் எங்களுக்குப் பெலனானவர்கள் என்று அப்போது யூதாவின் தலைவர் தங்கள் இருதயத்திலே சொல்லுவார்கள்.(5)
- எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்.(6)
- எருசலேமுக்கு விரோதமாய் வருகிற எல்லா ஜாதிகளையும் அழிக்கப் பார்ப்பேன்.(9)
- கிருபையின் ஆவியையும், விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன்; அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப் பார்த்து, ….எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள்.(10)
- எருசலேமின் புலம்பல் பெரிதாயிருக்கும் (11). *{>> இயேசுவே கிறிஸ்து என்று உணராதிருந்ததை எண்ணி துக்கம்}*

Sword of the Spirit

அதிகாரம். 13

⬇ ⬇ ⬇ கடைசி நாட்களில் ⬇ ⬇ ⬇

- அந்நாளிலே நான் விக்கிரகங்களின்பேரும் தேசத்தில் இராதபடிக்கு அழிப்பேன்; …..தரிசனம் சொல்லுகிறவர்களையும், அசுத்த ஆவியையும் தேசத்திலிருந்து போய்விடவும் பண்ணுவேன். (1).
- பொய் தீர்க்கதரிசியானவனை அவன் குடும்பத்தினரும், சிநேகிதரும் கூட அந்நாட்களில் உயிரோடே விடுவதில்லை.(3 - 6)
- தேசத்திலிருக்கிற இரண்டு பங்கு மனுஷர் சங்கரிக்கப்பட்டு மாண்டுபோவார்கள்; மூன்றாம் பங்கோ அதில் மீதியாயிருக்கும்.(8)
- அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன்; ……… இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவனென்று அவர்கள் சொல்லுவார்கள்.(9) >> *மேசியா சிலுவையில் அடிக்கப்பட்டப்பின் அவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு மிகுந்த உபத்திரவம்.ஆனாலும் கர்த்தர் அவர்களைக் காப்பார்.*

Sword of the Spirit

அதிகாரம்.14

கர்த்தருடைய நாள்

- ஒருநாள் உண்டு, அது கர்த்தருக்குத் தெரிந்தது; அது பகலுமல்ல இரவுமல்ல; ஆனாலும் சாயங்காலத்திலே வெளிச்சமுண்டாகும்.
- ….என் தேவனாகிய கர்த்தர் வருவார்; தேவரீரோடே எல்லா பரிசுத்தவான்களும் வருவார்கள்.(5)
- அப்பொழுது கர்த்தர் பூமியின்மீதெங்கும் ராஜாவாயிருப்பார்; அந்நாளில் ஒரே கர்த்தர் இருப்பார், அவருடைய நாமமும் ஒன்றாயிருக்கும்.(9)
- அதிலே ஜனங்கள் வாசம்பண்ணுவார்கள்; இனிச் சங்கரிப்பில்லாமல் எருசலேம் சுகமாய்த் தங்கியிருக்கும்.(11)
- அந்நாளிலே குதிரைகளின் மணிகளிலே கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் விலாசம் எழுதியிருக்கும்; கர்த்தருடைய ஆலயத்திலுள்ள பானைகள் பலிபீடத்துக்கு முன்பாக இருக்கிற பாத்திரங்களைப் போலிருக்கும்.(20)

Sword of the Spirit

....

- கர்த்தர் புறப்பட்டு, யுத்தநாளிலே போராடுவதுபோல் அந்த ஜாதிகளோடே *{>>இஸ்ரவேலுக்கு விரோதமான ஜாதிகள்}* போராடுவார்.(3)
- அந்நாளிலே கர்த்தரால் பெரிய கலக்கம் அவர்களுக்குள் உண்டாகும்; அவனவன் தன்தன் அயலானின் கையைப் பிடிப்பான்; அவனவனுடைய கை அவனவன் அயலானுடைய கைக்கு விரோதமாக எழும்பும்.(13)
- யூதாவும் எருசலேமிலே யுத்தம்பண்ணும்; அப்பொழுது சுற்றிலும் இருக்கிற சகல ஜாதிகளுடைய ஆஸ்தியாகிய பொன்னும் வெள்ளியும் வஸ்திரங்களும் மகா திரளாகக் கூட்டப்படும். (14)
- அப்பொழுது பூமியின் வம்சங்களில் சேனைகளின் கர்த்தராகிய ராஜாவைத் தொழுதுகொள்ள எருசலேமுக்கு வராதவர்கள் எவர்களோ அவர்கள்மேல் மழை வருஷிப்பதில்லை.(17)

Sword of the Spirit

தேவனுக்கே மகிமை

ஆமென்

Sword of the Spirit

Sword of the Spirit